ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

यःप्रीणयेत्सुचरितैः पितरं स पुत्रः
यत् भर्तुरेवहितमिच्छाति तत् कलत्रम् ।
तन्मित्रमापदि सुखेचसमक्रियं य-
देतत्त्रयं जगति पुण्यकृतो लभन्ते ॥

எவனொருவன் தன்னுடைய நன்னடக்கையால் பிதுருக்களுக்குத்திருப்தியை யுண்டுபண்ணுகிறானோ அவன்தான் சற்புத்திரனாவான். தன்கணவனுடைய நோக்கமறிந்து அவனிஷ்டம்போல் நடப்பவளே களத்திரமெனப்படுவாள். ஆபத்துக்காலத்தும், சுகம் நேர்ந்தகாலத்தும் விட்டுப்பிரியாமலிருப்பவனே மித்திரனாவான். இம்மூன்றையும் இவ்வுலகிலுள்ள புண்ணியவான்களடைகிறார்கள்.

இதனால் ஒரு குடும்பத்தில் புத்திரன் ஏற்பட்டால் அவன் எப்பொழுதும் தன் மாதா, பிதா, இவர்களுக்கு விசேஷ சந்தோஷத்தையுண்டு பண்ணக்கூடிய நல்வழிகளிலேயே நடக்க வேண்டுமென்றும், பார்யையானவள் தன் புருஷனுடைய அபிப்பிராயத்திற்கு மாறாக நடக்காமல் அவனுக்கு அனுகூலமாயிருந்து ஹிதத்தையே செய்யவேண்டு மென்றும், மித்திரனவன் தன் சிநேகிதன் விசேஷ ஐசுவரியத்தை யடைந்து சந்தோஷமாயிருக்குங்காலத்தில் வெகு நேசமாயிருந்து, கஷ்டதசையை யடைந்த விடுத்துக் கவனிக்காமலிருக்கக்கூடாதென்றும் நிரூபிக்கப் படுகிறது இவ்விதம் அவரவர்களின் தர்மத்தை நன்கு அனுஷ்டிக்கும் புத்திர, மித்திர, களத்திரங்கள் ஒருவனுக்குச் சரியாய் ஏற்படவேண்டுமானால் முன் ஜன்மாவில் புண்ணியம் செய்திருந்தாற்றான் கிடைக்கும். இவ்வுலகிலும், பரலோகத்திலும் நாம் க்ஷேமத்தையடைய வேண்டுமானால் புண்யகர்மானுஷ்டானமே முக்கியமாகையால் அதைக்கைவிடாமலனுஷ்டிக்க வேண்டும்.

சுபம்

நியூ இந்தியா அபிப்பிராயப் படுவது சரியல்ல.

(1923ஸு ஆகஸ்டுமீ "நியூ இந்தியாவில்"

ஒரு நூதனமான சங்கராசாரியார்.

"திருச்சினப்பள்ளிக்குச் சுமார் 2 மைல் தூரத்திலிருக்கும் ஓர் கும்பகோண மடத்திலுள்ள சங்கராசாரியார் தற்காலம் ஒற்றுமையாமை இயக்கத்திற் சேர்ந்து தியஸாபிகல் ஸொஸைடிக்கு எதிர்பிரசாரம் செய்வதாய்த் தெரியவருகின்றது. தியஸாபிகல் ஸொஸைடியைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ளாதவர்களே இத்தகைய ஒத்துழையாமை இயக்கத்தை ஆமோதிப்பார்களாதலால் அவர் அவ்வாறு செய்வது ஸகஜமே" என்று வந்திருக்கிறது.

இதிலுள்ள நூதனமான என்ற பதத்தின் கருத்து நமக்கு நன்கு விளங்கவில்லை. சங்கராசாரியார் என்று திருநாமம் பூண்டு பீடாதிபதியாயிருப்பவர்கள் இவ்விதமிருக்க வேண்டுமென்று இவர்களுடைய பெரும்புத்தியால் கண்டுபிடித்துத் தீர்மானிக்கப்பட்ட மார்க்கத்தில் அவர்கள் செல்லாததினால் நூதனமென்று கருத்தா? அல்லது இவர்களைப்போல் அந்தந்தக் காலங்களிலிருக்கும் ஜனங்களின் நோக்கத்தை யனுஸரித்துத் தோன்றியவாறு பலகொள்கைகளை வெளியிடவில்லையாகையால் நூதனர் என்று கருத்தா? அல்லது சுருதி ஸ்மிருதி முதலிய

பிரமாணங்களில் கூறப்பட்டுள்ள விதிகளையும் முன்னோர்களான பெரியோர்களுடைய அனுஷ்டானங்களையும் கைவிடாமல் நடத்திக்கொண்டு வருவதால் இக்காலத்துக்கு அது நூதனமென்று கருத்தா? தம்புத்திக்குத் தோன்றியவாறு பிறரும் நடக்கவேண்டுமென நினைப்பது மிகவும் தவறுகையால் முதலாவது அபிப்பிராயம் சரியல்ல. லோககுருவென்று அனைவராலும் வணங்கப் பெற்ற மகிமை பொருந்திய பீடாதிபத்யஸ்தானத்தை வகித்த மகான்கள் எந்தசமயங்களிலும் மாறுதலடையாமல் இம்மைமறுமையென இருவகைப்பயனையுமளிக்கக் கூடிய பரமேச்வரனது ஆக்ஞாரூபங்களான சுருதி ஸ்மிருதிப் பிரமாணங்களையும் அதை நன்குணர்ந்து பின் பற்றும் மஹான்களின் கொள்கைகளையும் கைவிடாமல் காலரீதியையும், ஜனங்களுடைய நோக்கத்தையும் அனுசரிப்பார்களேயன்றி சாஸ்திரார்த்தங்களுக்கு விரோதமாயுள்ள மற்ற நோக்கங்களைக் கவனிக்க மாட்டார்களென்பது வெளிப்படையே. இதனால் மேற்கூறிய இருவிதமும் சொல்வது பொருந்ாதெதன நீக்கப்பட்டது. இவ்விதம் ஒரு அபிப்பிராயத்திற்கும் பொருந்தாத தலையங்கத்திலுள்ள நூதன என்ற அப்பதம் எழுதியவர்களின் அறிவை நன்கு விளக்கிக் காட்டுகின்றது.

தற்காலம் ஒத்துழையாமை இயக்கத்திற் சேர்ந்து தியஸாபிகல்ஸொஸைடிக்கு எதிர் பிரசாரம் செய்வதாய்த் தெரிகிறது என்றும் எழுதப்பட்டுள்ளது. மஹான்களைப் பற்றிய ஓர்விஷயததை வெளியிட முன்வரும் அறிஞர்களான பத்ரிகாசிரியர்கள் அவ்விஷயத்தை நன்குணர்ந்து வெளியிடுவார்களே யன்றுத் தோன்றியவாறு வெளியிடத் துணியார்கள். கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளவர்கள் சுமார் ஐந்தாறுவருஷகாலமாய் விஜயயாத்திரையாகப் புறப்பட்டுப் பல நகரங்களிலும், பல கிராமங்களிலும் சஞ்சாரம் செய்துகொண்டு வருகிறார்கள். ஆங்காங்கு பல சிஷ்யர்களின் வேண்டுகோளுக்கிணங்கி உபந்நியாஸங்களும் செய்திருக்கிறார்கள். பல புறமதத்தினர்களும் தங்

கள் சந்தேகங்களைத் தெரிவித்து அவர்கள் கூறும் சமாதானங் களையும் கேட்டுத் தெரிந்து மிகவும் ஆனந்திக்கின்றனர். ஒவ்வொருநாளும் அவர்களுடைய அனுஷ்டான நியமங்களையும் நன்கறிந்திருக்கின்றனர். அன்றியும், பூஜை, ஜபம், முதலிய தினசரி நியமங்களை முடித்து அவகாசம் நேர்ந்தால் சிஷ்யர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஹிந்துமத சம்பந்தமாய் தம் பரமாசார்யாளுடைய நோக்கத்தைக் கைவிடாமல் சாஸ்திரார்த் தங்களைப் போதிப்பார்களே யல்லாது, மற்ற மதங்கள், சபைகள், இராஜீய விஷயங்கள் முதலியவைகளில் உதாஸீனர்களாயிருப்பார்களேயன்றி அவற்றிற்பற்றுதலையாவது துவேஷத்தையாவது ஒரு சமயத்திலும் கொள்வதில்லையென்பது யாவருமறிந்ததே. ஒரு சமயம் தம் மதசித்தாந்தத்தைப் பற்றிப் போதிக்குமிடத்து இடையில் புறமதங்களிலிருக்கும் தோஷங்களையெடுத்து வெளியிடும்படியாக அவசியமான பிரஸக்தி ஏற்பட்டகாலத்தில் வெளியிட நேர்ந்திருக்கலாம். அதுவல்லாமல் அவர்களுக்கு ஒன்றில் அபிமானமும் மற்றொன்றில் துவேஷமும் இருப்பதாக நெருங்கிப் பழகும் கோடிக்கணக்கான ஜனங்களுள் ஒருவராவது அபிப்பிராயப் படுவதாகத் தெரியவில்லை. உண்மையிவ்விதமிருக்க தத்துவத்தைச் சிறிதும் அறியாது கூறும் "நியூ இந்தியா" பத்திரிகையை நோக்க மிகவும் ஆச்சர்மாகவேயிருக்கிறது. இதினால் பல பொது ஜனங்களுடைய மனதைப் புண்படுத்துவதுடன், பத்திரிகையின் பெருமையைக் குறைத்துக் கொண்டு மஹான்களிடம் தவறான அபிப்பிராயங் கொள்வதால் நேரிடும் பாபத்திற்குள்ளாவதைத்தவிர வேறுயாதொரு பயனும் அடைவதாகக்காணப்படவில்லை. அந்தோ! லோகோபகாரத்தைக் கருதித்தினப்பதியாய் வெளிவரும் இது போன்ற பத்திரிகைகள்,பெரியோர்களைப்பற்றித் தாறுமாறாகத் தமக்குத் தோன்றியவாறு எழுதப்பட்டுள்ள தவறான அபிப்பிராயத்துடன் வெளிவருவது பத்திரிகைகளுக்கழல்ல.

யஜுர்வேத உபாகர்மம்.

இந்த வருஷம் நமது சாகாதீசனுன சுக்கிரபகவான் அஸ்தமடைந்திருப்பதால் இதரஸ்மிருதிகளை உபஸம்ஹாரம்செய்து பார்த்தால் கால சுத்தியைக் கவனிக்கவேண்டியதாகிறதென்று சொல்லுகிறுர்கள். அப்படியே:—

मलमासे निपतिते सूतके मृतकेऽपि वा ।
ग्रहणे संक्रमेवापि मौढ्येऽपि गुरुशुक्रयोः ॥
प्रौष्ठपद्यामथाषाढ्यामुपाकरणमिष्यते ।
मासत्रयेऽपि दोषश्चेत् श्रावण्यामेव कारयेत् ॥

என்று வஸிஷ்டர் சொல்லுகிறுர்,

शाखाधीशे शक्तियुक्ते तच्छाखाध्ययनं शुभम् ।

என்றும் வாக்கியமிருக்கிறது. பிறகு

गुरुभार्गवयोर्मौढ्ये मलमासे तथैवच ।
प्रथमोपाकृतिर्नस्यात्कुर्याच्चेत्स विनश्यति ॥

என்று விருத்த மனுவும்,

गुरुभार्गवयोर्मौढ्ये...................... ।
प्रथमोपाकृतिर्नस्यात्कृतं कर्मविनाशकृत् ॥

என்று நிர்ணயஸிந்துவில் காச்யபவசனமுமிருக்கிறது.

வியாஸ வசனத்தைப்பற்றி ஸமூலமோ நிர்மூலமோவென்று விவாதமிருப்பதால் அதைப்பற்றித் தனியாய் கடைசியில் விசாரிப்போம்.

மேற்கூறிய வசனங்களில் சாகாதீசன் சக்தியுள்ள காலத்திலே சாகாத்தியயநம் சுபம் என்று சொல்லி மௌட்யாதி தோஷம் வந்தால் (1) சிராவணத்தில் அல்லது ஆஷாடத்தில் அல்லது பாத்திரபதத்தில் செய்வது இஷ்டம் என்று சொல்லி

பிறகு பிரதம உபாகர்மம் செய்யக் கூடாதென் றுரைத்து செய்தானுகில் நாசத்தை அடைவான் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஸாமானியமாய் காலாந்தரம் விதித்து ப்ரதமம் கூடாதென்று சொல்லி அதில்பிரத்தியவாயமும் பலமாய் சொல்லியிருப்பதால் ஸாமான்ய நிஷேதங்களெல்லாம் விசேஷமாகிய பிரதமத்தில் உபஸம்ஹாரத்தை அடைகிறதென்பது உசிதமாகும். (2) அப்படியே ஸ்மிருதிஸாரஸமுச்சயமென்கிற மஹாராஷ்டிர நிபந்தந கிரந்தத்தில் காச்யபவசனமிருக்கிறது.

प्रथमाब्दे वटूनां हि दोषोऽयं समुपस्थितः ।

என்று சொல்லி அநுபதமே.

श्रावणेमासिकुर्वीरन्नुपाकर्मयथाविधि ।
गृहस्थाश्चेद्वटूनांहि मासिपूर्वोत्तरे विधिः ॥

பிரம்ஹசாரி விஷயத்தில் பிரதம சிராவணத்தில் இந்ததோஷம் வரும். கிரஹஸ்தர்களானுல் சிராவண மாதத்தில் செய்யவேண்டும். பிரம்ஹசாரி விஷயத்தில் தான் முன் பின் மாதத்தில் செய்யவேண்டுமென்ற விதி என்று விதிக்கப்பட்டிருக்கிறது. இப்படி அனேக வாக்கியங்கள் பிர்தம சிராவண விஷயமாய்த் தான் தோஷத்தை விதிக்கிறபடியால் அதை அனுஸரித்து (3)சாமானிய நிஷேதத்தை உபஸம்ஹாரம் செய்யவேண்டியது உசிதமாகும். அப்படியே,

प्राधान्येन विधानाच्च मनुनाध्यायकर्मणः ।
प्रथमोपाकृतिश्चापि कर्तव्येत्याह गौतमः ॥

என்ற வாக்கியத்தினுல் ஹேது கர்ப்பிதமான கமகம் "பிரதமத்தையும் பண்ணலா மென்றதினுல் இரண்டாவது முதலிய சிராவணத்திற்கு தோஷமில்லையென்பது த்வனி ரூபமாய் அகப்படுகிறது.

அதனுல்தான் பிராமணனைக் கொல்லக்கூடாது ஆத்ரேயனைக் கொல்லக்கூடாது என்றபடி விசேஷநிஷேதம் இவ்விடம்

வராது. அல்பதோஷம் மகாதோஷமென்று மதமிருந்தால் **प्रथमोपाकृतिश्चापि** என்று சொல்லப்படமாட்டாது. **इष्यते,शुभं** என்ற வாக்கியங்களால் ஸாக்ஷாத் **उपाकर्मनकुर्वीत** என்றபடியில்லாமல் போனாலும் நாம் அப்படியொரு நிஷேதம் கல்பித்து **प्रथमोपाकृति-र्नस्यात्** என்று இரண்டாவது நிஷேதம் வந்ததால் அதை உபஸம்ஹார நிஷேதமாய்க்கொள்வதுதான் பிரகிருதத்திற்கு ஒட்டும். அப்படியே ஹேமாத்ரியில் வசனம்.

मृतानुगमनं नास्ति ब्राह्मण्या ब्रह्मशासनात् ।

பிராமணஸ்திரீ ஸஹகமனம் செய்யக்கூடாது. பிரும்மா அப்படி விதித்தார். என்று சாமானிய நிஷேதம்,

पृथक्चितिं समारुह्य न विप्रा गन्तुमर्हति ।

தனியாய் சிதையேறி பிராமணீ ஸஹகமனம் செய்யக்கூடாது என்ற விசேஷத்தால் உபஸம்ஹாரத்தை அடைகிறது. இது க்ரதுவிஷயமான நிஷேதம். அப்படியே புருஷார்த்தமாகவும்,

वृन्ताकनालिकपोतीककुसुम्भाश्मांतकाश्चेति शाकानामभक्षाः ॥

விருந்தாகம். (4) கத்திரிக்காய் முதலியன சாப்பிடத்தகுந்த தல்ல என்று சாமானிய நிஷேதம்,

कण्डूरं श्वेतवृन्ताकं कूश्माण्डं च विवर्जयेत् ।

வெள்ளைக் கத்திரியைத்தள்ளவேண்டும் என்கிற விசேஷ நிஷேத வாக்கியத்தினால் உபஸம்ஹாரத்தை அடைகிறது.

இப்படியே சுக்ரமௌட்யாதி காலத்தில் உபாகர்மநிஷேதமானது பிரதம விஷயமென்றே கொள்ளுதல் பொருந்தும். இந்த மதியை அநுசரித்துத் தான் பரம மீமாம்ஸகரான பட்ட கமலாகரர்,

तच्च (उपाकर्म) शुक्रास्तावपि कार्यम्

உபாகர்ம சுக்ராஸ்தமனத்திலும் செய்யத்தகுந்தது என்றுரைத்து அநுபதமே,

अस्ते प्रथमारंभस्तु न भवति ।

அஸ்தகாலத்தில் பிரதமாரம்பம் மட்டும் கூடாதென்று விதித்தார். அப்படியே ஸம்ஸ்கிருத சந்திரிகை என்ற பத்திரிகையில் ரிக்வேதி சிராவணம் நிர்ணயம் செய்யுங்கால் மாஜி அப்பா சர்மா வித்யாவாசஸ்பதி அவர்களால்,

गुरुशुक्रादि दोषस्तु नूतनोपाकृति विषयः ।

குரு சுக்ராஸ்த தோஷப் பிரதமசிராவண விஷயம் என்று கூறப்பட்டது.

(ஷை பத்திரிகை 14 ஸஞ்சிகை 16 பக்கம் பார்க்க.)

வைத்தியநாத தீக்ஷிதரும்,

श्रावणप्रोष्ठपदाषाढेष्वेकस्मिन् दोषरहिते प्रथमोपाकृतिः कर्तव्या ।

சிராவணம், பாத்திரபதம், ஆஷாடம் இந்த மூன்று மாதங்களுள் தோஷமில்லாத ஒன்றில் பிரதம சிராவணம் செய்யவேண்டும் என்று எழுதினர்.

மற்றும்,

नित्ये नैमित्तिके जप्ये होमेयज्ञक्रियासुच ।
उपाकर्मणि चोत्सर्गे ग्रहवेधो न विद्यते ॥

என்றும் கமலாகரபட்டர் கூறினர்.

மேலும்,

अङ्गत्वेऽपि च कालस्यनत्यागोऽन्याङ्गवत्कुतः ।
अनुपादेयरूपत्वात्काले कर्मविधीयते ॥

என்ற யாக்ஞவல்கிய வசனம்

मासप्रोक्तेषु कालेषु मूढत्वं गुरुशुक्रयोः ।
अधिमासादिदोषाश्चनस्युः कालविधेर्बलात् ॥

இந்தவசனங்களால் சாமானியமாய் பிரதமாரம்பம் தான் விலக்கென்று ஸ்மிருதிகளின் அபிப்பிராயம் என்று தோன்றுகிறது.

நிற்க, ஆபஸ்தம்பருடைய மதப்படி சிராவண சம்பந்தம் நித்தியமானதாலும் ஸ்வகால விதானமிருப்பதாலும் இதர ஸ்மிருதி ஸூத்திரங்களைக் கொண்டு ஸங்கோசம் முதலிய வேறுபாடுகள் செய்யக்கூடாது. பிரகிருதத்தில் நமது சாஸ்திரமாகிய ஆபஸ்தம்ப ஸூத்திரத்தில் ஸ்பஷ்டமாய் விதியிருப்பதால்

अनुक्त अन्यतो ग्राह्यम् ।

என்ற நியாயம் வர அவகாசமில்லை, இதற்கு ஞாபகங்கள் கிருஹ்ய வியாக்கியானங்களி லகப்படும். ஸர்ப்பபலிக்கு ஸ்வகால விதானமிருப்பதாய் பிரதி வருஷம் செய்யவேண்டியதாகவும் ஈசான பலிக்கு ஸ்வகால விதானமில்லாமையால் ஸாமானிய விதியினால் உத்தராயணம் முதலியகாலம் வருமென்றும் அதை பிரதிவருஷம் செய்யவேண்டாமென்றும் வியாக்கியானத்தில் காண்க. நமது சாகையைச் சார்ந்து பரஸ்பரம் விலக்ஷணமான 6-ஸூத்திரங்களிருந்தபோதிலும் குறைவதிகம் இவைகளை கவனிக்காமல் தன் சூத்திரத்திலிருப்பதை யனுஷ்டிக்கவேண்டும்.

बह्वल्पं वा स्वगृह्योक्तं यस्य कर्म प्रकीर्तितम् ।
तस्य तावति शास्त्रार्थे कृते सर्वः कृतो भवेत् ॥

இப்படி சாஸ்திரமிருக்கிறது. ஆபஸ்தம்பரால் இரண்டு காலங்களிலும் உட்கார்ந்து ஸந்தியாஜபம், நதியிலும் ஆதித்யனைப் பார்த்து ஸ்நானம், ஔபாஸனத்தை நித்தியமாய் பிரயாணத்திலும் குண்டாணி(உகை)ல்தாரணம் செய்வது, ஸாயம்ஸந்தியார்க்கிய ப்ரதானம் நின்றே செய்வது, இம்மாதிரி இன்னும் அனேக விலக்ஷண ஆசாரங்கள் சொல்லப்பட்டுள்ளன.

இப்படியே நமது ஆசார்யரின் மதம் வேறுயும் கௌரவத்திற்கு பாத்திரமானது மென்று போதாயனரே தனது கல்ப ஸூத்திரத்தில் அக்னிஸமாரோபண விஷயத்தில்,

आपस्तम्बस्य तन्नेष्टमात्मारूढः सदाशुचिः ।

என்று திருவாய் மலர்ந்தருளினர். இம்மாதிரி விலக்ஷணமாய் ஏற்பட்ட ரகசியத்தைக் காண்பிப்பதற்காகவேதான் விவாதாஸ்பதமான வியாஸ வசனம் ஏற்பட்டது.

श्रावण्यामथवाषाढ्यां प्रौष्ठपद्यामथापि वा ।
दुष्टायां पूर्व पूर्वस्यामुत्तरस्यां विधीयते ।
कालत्रयेऽपि दोषेतु श्रावण्यामेव कारयेत् ।
पौर्णमास्यास्तु नित्यत्वदापस्तम्बस्य शासनात् ॥

मुक्त्वा भाद्रपदाषाढौ श्रावण्यामेव कारयेत् ।

இதில் ஒன்றரை சுலோகத்தினால் ஆபஸ்தம்பிகள், அதல்லாதார் (போதாயன பாரத்வாஜ ஸத்தியாஷாட வைகாநஸாதி ரிஷிகளின் சிடர்கள்) இவ்விருவருக்கும் ஸாதாரணமாய் மௌட்யாதி தோஷத்தில் சிராவணத்தை நிஷேதித்து கௌணகாலம் விதித்து ஆபஸ்தம்பி விஷயத்தில் तु என்பதினால் பக்ஷாந்தரமாக ஆரம்பித்து விசேஷ விதியாக முன்சொன்னதிலிருந்து விலக்கி சிராவணத்தில்தான் செய்யவேண்டியது என்று விதிக்கப்பட்டது.

त्वंताथादिनपूर्वभाक् என்ற வசனப்படி पौर्णमास्यास्तु என்று தனியாய் ஆரம்பித்ததினால் பக்ஷாந்தரமென்றே கொள்ளவேண்டும். तुक्கு பதிலாக चவைப்போட்டு முன் பாகத்திற்கு பின் பாகம் விஸ்தாரம் (வியாக்கியானம் ஹேது) என்று விகல்பிக்கிறார்கள். மேற்சொன்ன ஒழுங்கான அர்த்தத்தை நன்றாய் அறிந்துள்ள காலப்ரகாசிகா என்ற ஜ்யோதிஷக் கிரந்தகாரர் சொல்லுகிறார்,

स्वाध्यायस्य प्रधानत्वान्नित्यत्वाच्छ्रावणस्य च ।
ग्रहसंक्रमयोः शूलं श्रावणस्य न विद्यते ॥
मासप्रोक्तेषु ……………………कालविधेर्बलात् ॥
पौर्णमास्याश्च………………श्रावण्यामेव कारयेत् ॥

अन्तर्हिते सुरगुरावुपाकर्म तु कारयेत् ।
भार्गवस्यास्तकालेऽपि कुर्याच्छ्रावणमञ्जसा ॥
द्वयोर्मौढ्यं परित्याज्यमुपाकर्मणि नित्यशः ॥

आद्योपाकरणं नैवकार्यं कर्तृविनाशनम् ।
संध्योपरागदुष्टास्यात् मौढ्ये च गुरुशुक्रयोः ॥

"அத்தியயநம் பிரதானமானதாலும் சிராவண மாதம் நித்திய மானதாலும் கிரஹண சங்கராந்தி தோஷம் சிராவணத்திற்கு கிடையாது. மாஸத்தைக் குறித்து விதிக்கப்பட்ட காரியங்களுக்கு குரு சுக்ரமௌட்யம் மலமாதாதி தோஷங்களின் கால விதியின் பலத்தால் இல்லையென்றே அறியவேண்டும். அப்படியே பௌர்ணமி நித்தியமென்று ஆபஸ்தம்பரின் சாஸநமிருப்பதால் ஆஷாடம் பாத்திரபதம் இவ்விரண்டையும் விட்டு சிராவண பௌர்ணமியில் தான் செய்யவேண்டும்"

குரு சுக்ராஸ்த காலத்திலும் சிராவணம் செய்யவேண்டும். உபாகர்மாவில் இவ்விருவருடைய மௌட்யமும் ஒரு போதும் கவனிக்கவேண்டாம்.

"இந்த மௌட்யங்களில் பிரதமோபாகாணம் செய்யவே கூடாது செய்தால் நாசமடைவான்.

இப்படி தோஷமில்லையென்று சொல்லி காலவிதி பலத்தால் ஆபஸ்தம்பருடைய சாஸநத்தை முன்னிட்டு சிராவணியில் நடத்திவிடலாமென்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த கிரந்தகாரர் வியாஸ வசனத்தை ஸமூலமாக வைத்துத் தான் நிர்ணயம் செய்திருக்கிறார். இப்படியிருக்க இதை நிர்மூலமென்றும், இது இச்சையை முன்னிட்டு மூன்று காலங்களிலும் தோஷத்தை முன்னிட்டு "மூன்று காலங்களிலும் தோஷமுண்டாகு மதில் எதிலொன்றிலாவது" என்று வாத்தெரிய சிராவணத்தில் தான் என்று சொல்ல ஹேதுவாய் வந்ததென்று சொல்லுவது நியாயமாகாது. வஸிஷ்ட வசனமும் நிர்ணயஸிந்து முதலிய கிரந்தங்களில் காணப்படவில்லையென்று நிர்மூலமென்று சொல்லலாமா ?

மேலும் வஸிஷ்ட வசனம் தெளிவாயிருக்க வியாஸவசனம் என் அதை எடுத்து குருக்கி உரைத்தது என்று கேட்கிறார்கள்.

நமது ரிஷிகள் ஸ்வதந்திரர்களாகையால் அவர்களைக் கட்டுப்படுத்தமுடியாது. வியாஸ வசனம் மறுபடியும் அதைப்பற்றி ஆரம்பிப்பதால்தான் ஆபஸ்தம்பிகளுக்கு விசேஷத்தைக் குறிப்பிட வந்ததென்று தீர்மானிக்கலாம்.

மேலும் मुक्त्वाभाद्रपदाषाढौ என்பதில் मुक्त्वा என்ற நிஷேதம் பிரஸக்தியில்லாமலே வந்திருக்கிறது என்கிறார்கள்.

அதற்குஸமாதானம்:—

இந்த வசனங்களின் முன்பாகத்தினாலும் வஸிஷ்டவசனத்தினாலும் யஜுர்வேதிகளுள் ஸர்வஸூத்திராநுஸாரிகளுக்கும் சாமானியமாய் மூன்றிலும் தோஷமானால் சிராவணியில் செய்யவேண்டுமென்று வர ஆபஸ்தம்பிகளுக்கு மற்ற இரண்டும் எப்போதும் விலக்கு என்று காண்பிக்கிற அபவாதமாகும்.

இந்த விதிகளின் பிரகாரம்,

श्रावण्यां पौर्णमास्यामुपाकर्मकर्तव्यम्, शुक्रादिमौढ्ये न कर्तव्यं, कर्तव्यश्चाषाढ्यां प्रोष्ठपद्यां वा दोषरहितायाम् । अस्य विधेरापस्तम्ब्यानापस्ताम्बिसाधारण्येन प्रसक्तौ आपस्तंबिमात्रे अपवादोऽयम् "मुक्त्वाभाद्रपदाषाठा" वित्यादिः। "मासत्रयेऽपिदोषेतु" इत्यस्मिन् पक्षे आपस्तंबिनां तु न विधिः, स्वत एवसिद्धत्वात्॥

வசனத்தில் முன் சொன்ன श्रावण्यामेव என்றதற்கே பின் சொன்னது ஹேதுவென்று சொன்னால் आपस्तम्बस्य शासनात् என்பதே போதும் पौर्णमास्यास्तु नित्यत्वात् என்று சொன்னதினால் "நித்யமென்று" ஸகல தோஷத்திற்கும் அபவாதமென்றே யாகும். நித்யமானால் ஸந்தியாவந்தனம்போல் ஆசௌசாதிகளிலும்செய்யவேணுமென்று யோசிக்க வேண்டாம். ஸந்தியாவந்தனம் ஸர்வநித்யமாய் ஸூதகாதிகளில் கூட விடக்கூடாதென்று பிரதிபிரஸவமாய் விதிக்கப்பட்டுள்ளது.

ஆகவே உபாகர்ம காலமாகிய சிராவண பௌர்ணமிக்கு சுக்ர மௌட்யாதி தோஷமில்லையென்பதும் அதில்தான் ஆபஸ்தம்ப ஸூத்ராநுஸாரிகள் செய்யவேண்டுமென்பதும் சித்தம்.

இந்த விஷயத்தில் காலசுத்தி வேண்டுமென்று உபதேசிக்கிற மூலவசனங்கள் வைத்தியனுத தீக்ஷிதாளுடைய அபிப்பிராயங்கள் இவையெல்லாம் பிரதம சிராவணபரமாயும் போதாயன பாரத்வாஜ ஸத்யாஷாடாதி ஸூத்திரிகள் விஷயமாகவும் கொள்ளுதல் உசிதமென்று என் எளிய புத்திக்குத் தோன்றுகிறது. இதை ஆஸ்திகர்கள் கவனித்து பலாபலங்களை நன்குணர்ந்து முக்கியமான காலமாகிய சிராவண மாதத்தில் உபாகர்மாவை அனுஷ்டிப்பார்களென்று நம்புகிறேன்.

வி· எஸ்· ராமநாத சாஸ்திரீ

குறிப்பு:— 1 மௌட்டியாதி தோஷம் வந்தால் சிராவணத்தில் அல்லது ஆஷாடத்தில் அல்லது பாத்திரபதத்திலென்று கூறப்பட்டிருக்கின்றது. அது சரியல்ல. "மௌட்டியாதி தோஷம் வந்தால்" என்பதற்கு, கிரமமாக நடத்த வேண்டிய சிராவணத்தில் மௌட்டியாதி தோஷம் நேர்ந்தால் என்ன செய்வதென்று கேள்வி. இவ்விஷயத்தில் சிராவணத்தையே முந்தி எடுப்பது தவறு. தோஷமற்ற ஆஷாடத்திலோ பாத்திரபதத்திலோ செய்ய வேண்டுமென்று சொல்லல் வேண்டும்.

2. "சாமானிய நிஷேதங்களெல்லாம் விசேஷமாகிய பிரதமத்தில் உபஸம்ஹாரத்தை யடைகின்றதென்பது உசிதமாகும்" எனக்கூறி தமதபிப்பிராயத்திற்குச் சாதகமாக நம் தேயத்தில ஜனுட்டிக்கப் படுகின்ற வைத்யநாத தீக்ஷிதீயம் முதலிய கிரந்தங்களை விட்டு ஒருவராலும் கேட்கப் படாத மஹாராஷ்டிர நிபந்தன கிரந்தத்தில் காச்யப வசனமிருக்கின்றதென்று மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார். இக்காச்யபரை ஸ்மிருதிகர்த்தர்களுள் முக்கியமாக வெடுக்கப்படவில்லை. அவ்வாறு எடுக்கப்பட்டிருப்பினும், நம்தேயத்தினர்கட்கு இம்மாதிரி கிரந்தமிருப்பதாகக்கூடத் தெரியாது. அதைப் பிரமாணமாகவெடுத்துக் கொண்டு ஒரு கர்மாவையும் நாம் அனுட்டிப்பதாகத் தெரியவுமில்லை. ஆகையால் பலபண்டிதர்களின் அபிப்பிராயத்திற்கு மாறுதலாய் தாம் ஓர் அர்த்தத்தைச் சொல்லி அதற்குப் பிரமாணமாக நம்மனுட்டானத்திலில்லாத கிரந்த

வசனத்தைக் காண்பிப்பது பொருந்தாது. அதுபிரமாணமாக வும் ஆகமாட்டாது. அவ்விதமங்கீகரித்தாலும் இவர் அபிப்பி ராயத்திற்கு அனுகூலமாகவுமாட்டாது.

3. சாமானிய நிஷேதத்தை உபஸம்ஹாரம்செய்வது உசி தமாகுமென்பதும் சரியல்ல. நிஷேதவசனங்களுக்கு ஏகவாக் கியார்த்தமாய் அங்கிகரித்துச் சாமானிய விசேஷமென்று விலக்குவது கூடாது. அப்படி விலக்கினுல்,

न ब्राह्मणं हन्यात्, नात्रेयं हन्यात् ।

என்கிற இது போன்ற பலவிடங்களிற் கூறும் தோஷத்திற்கு யாது பரிகாரம்? அதற்கு பிரமாணத்துடன் ஒன்றும் தெரி விக்காமல் உசிதமாகுமென்று தனதபிப்பிராயத்தை மட்டில் வெளியிடுவது அழகல்ல "प्राधान्येन" என்கிற மனுவசனம் தோஷ முள்ள காலத்தில் பிரதமோபாகர்மம் செய்யக் கூடாதென்று நிஷேதித்திருப்பதால் மூன்று மாதங்களிலும் தோஷமிருந்தால் அதைச் செய்யாமல் விட்டு விடுகிறதா? என்று ஏற்படும் சங் கைக்கு, எவ்வித தோஷமிருந்தாலும் சாந்தி செய்தாவது பிரத மோபாகிருதியும் செய்தே தீரவேண்டுமெனக் கூறுகின்றது. ஆகவே, இவ்வசனமும் இவர் அபிப்பிராயத்திற்குப் பிரமாண மாகாது.

4 கத்தரிக்காய் சாப்பிடகூடாதென்று சாமானிய நிஷே தத்தைச் சொல்லி வெள்ளைக் கத்தரிக்காயைச் சாப்பிடக்கூடா தென்கிற விசேஷவாக்கியத்தினுல் உபஸம்ஹாரத்தையடைகி ன்றதெனு இவ்வாறு இரண்டு மூன்று விடங்களில் இவர்எழுதி யுள்ளார். அதைப்பற்றி ஈண்டுசிறிது விசாரிக்கின்ருேம். இங்கு உபஸம் ஹாரமடைகின்ற தென்பதில் கருத்துயாது? இவ்விரண் டு வசனங்களும் சேர்ந்து பிரதமோபாகாணம் செய்யக்கூடா தென்று மாத்திரம் போதிக்கின்றனவா? அல்லது பிறர் சொல் லுகின்றவாறு, முதல் வசனத்தால் உபாகர்மசாமானியத்திற்கு நிஷேதமும், இரண்டாவதால் பிரதமோபாகாணத்திற்கு அதிக தோஷமென்று அபிப்பிராயமா?

आत्रेयं नहन्यात् श्वेतवार्ताकं न भक्षीयात् ।

என்பதாதி நிஷேதவசனங்களுக்கும் கத்தரிக்காய் சாப்பிடலாகாது, பிராமணனை ஹிம்ஸிக்கக்கூடாது என்ற சாமானிய வசனங்களுக்கும் சேர்த்து வெள்ளைக்கத்தரிக்காய் சாப்பிடக்கூடாதென்றும் ஆத்திரேயனை ஹிம்ஸிக்கக்கூடாதென்றும் தான் அர்த்தமேற்படும். சாமனியக்கத்தரிக்காயை உபயோகிக்கலாமென்றும், ஆத்திரேயனைத்தவிர்த்து ஏனையப்பிராமணர்களை ஹிம்ஸிக்கலாமென்றும் இதனுல் சித்திக்கின்றது. இவ்விதமே சரியென்ருல், அந்தணர்களை வதைப்பது தோஷமில்லையென ஒருவரும் அங்கீகரிக்க மாட்டார்கள். ஆகவே முதற் கூறிய வண்ணம் பொருட்படுத்துவது அமையாதெனத்தள்ளப்பட்டது. இரண்டாவது, அர்த்தத்தையங்கீகரிப்பின், மேற்சொல்லப்பட்ட எவ்விததோஷமும் அணுகாது. பிறர்களும் அஃதை ஒப்புக்கொள்ளுவார்கள். ஆனுல் இவ்வாறு கொள்வதினுல், இவருக்கு விரோதமேயன்றிச் சாதகமில்லை. இதைவிட்டு, மூன்ருவதான சிலாக்கியமாயுள்ள வேறு கருத்திருப்பதாகதெரியவில்லை. ஆனுல் சாமானிய விசேஷ வசனங்களிருக்குமிடத்தில் விசேஷ வசனங்களுக்கு, சாமானிய வசனத்தின் கருத்தைத்தவிர அதிகமான அர்த்தம் கிடையாதென்று சொல்வது மிகவும் ஸாஹஸம். விசேஷவசனத்தை எழுதியஸ்மிருதி கர்த்தர்களுக்கும் இவ்வபிப்ராய மிருக்குமாகில் அவ்வசனத்தை எழுதாமலே யிருப்பார்கள் அவ்விதமின்றி, வேண்டுமென்றே விசேஷவசனத்தைக்கூறியிருப்பதால் சாமானிய வசனத்தைக்காட்டிலும், இதற்கு அபிப்பிராய விசேஷம் கூறவேண்டு மென்பதே அவர்களுடைய கருத்தென நன்கு வெளியாகின்றது. வேறு விதம் சொல்வதற்கிடமில்லை என்று தெரிகின்றது.

இவரும் தெளிவாய் வெளியிடவில்லை. "உபஸம்ஹாரமாய் கொள்ளவேண்டும்" "உபஸம்ஹாரத்தையடைகின்றது" என்று மட்டில் ஆங்காங்கு எழுதுகின்ருர். இதன் கருத்து நமக்கு விளங்கவில்லையாதலால் அவரையே கேட்கவேண்டியிருக்கிறது.

இங்கனம் தம்மால் செய்யப்பட்ட தீர்மானத்திற்குப் பிரமாண மாய் ஹோமாத்திரி வசனத்தை யெடுத்துக் காண்பித்திருக் கின்றார். அதுவும் சரியல்ல. அங்கு ஆரம்பத்தில் பிராம்மண ஸ்திரீ தன் பதியோடு அனுகமனம செய்யக் கூடாதென்று கூறி, இவ்வாறு பதியோடு சேர்ந்து போவது கூடாதெனச் சாஸ்திரம் நிஷேதிப்பினும் கணவன் மரித்த பின்னர் உலகவாழ் கையிலுண்டான வெறுப்பினால் தனியாய் வேறு சிதையிலேறி போய்விடுவோமென்று நினைத்தாலும் அதுவும் கூடாதென்று மேல்வசனத்தில் கூறியிருக்குன்றார். கீழ் வசனங்களைப் போல் இதையும் விசேஷ விதியென்று பிரமித்து திருஷ்டாந்தமாக யெடுத்துக் காட்டுவது எவ்வாறு பொருந்தும்? ஆகவே அது வும் சரியெனக் கொள்வது ஒருசிறிதும் அமையாதென்க.

முந்தித்தான் செய்ய வேண்டு மென்று கூறும் பண்டிதர் களுடைய அபிப்ராயதை நன்கு கவனித்து அதற்குற்ற பிராம ண வசனங்களை விளக்கிக்காட்டாமல், அநாவசியமாகவும் பிரகி ருதத்திற்குப் பயன்படாததாயுமுள்ள பல வசனங்களைக்கூறியி ருக்கின்றனர். இவைகளில் ஒவ்வொன்றுக்கும் சமாதானம் கூற லாமெனினும்,பிரதானமல்ல. நிபர்ஹணநியாயேநமுக்கியமாயுள் ள சிலவிடங்களுக்கு விடைபகர்வதே பண்டிதர்களுக்குப் போ துமென்றும், அநாவசியமாய் கிரந்த விஸ்தாரம் வேண்டிவ தில்லை யென்றும் விரிவிற்கஞ்சி விடுத்தனம். இதனால் முன் அத் வைதஸபையில் வித்வான்கள் செய்யப்பட்ட ஸித்தாந்தம் அற் பமும் மாறுமெனத் தோன்றவில்லை.

[இனி இவ்வருஷத்திய யஜுர்வேத உபாகர்மவிஷயமாய் வரும் வியாஸங்கள் பிரசுரிக்கப்படமாட்டாது].   ப—ர்.